| | |
|---|---|
| Liberté • Égalité • Fraternité<br>RÉPUBLIQUE FRANÇAISE<br>MINISTÈRE DE LA JUSTICE | 6<br>**உரிமைகள் பிரகடனம்**<br>**காவலில் வைக்கப்பட்ட நபருக்கு கொடுக்கப்படும்**<br>**(16இல் இருந்து 18வயது வரை உள்ள நபர், ஒரு வயது வந்தோர் உடன் சேர்ந்து செய்தவராகவோ அல்லது அவருடன் உடந்தையாக இணைந்து சட்டம் 706-73படி குற்றத்தை செய்திருந்தால்)** |

**கீழ் இருக்கும் தகவல்களை நீங்கள் புரிந்துகொள்ளும் மொழியில் உங்களுக்கு கிடைக்கவேண்டும்**.

***நீங்கள் காவலில் இருக்கும் காலம் முற்றிலும்.இந்த ஆவணத்தை வைத்து கொள்ளலாம்***

நீங்கள் காவலில் வைக்கப்பட்டுள்ளனர் என்று உங்களுக்கு தெரிவிக்கிறோம். நீங்கள் ஒரு வயது வந்தோர் உடன் சேர்ந்து செய்தவராகவோ அல்லது அவருடன் உடந்தையாக இணைந்து சிறை தண்டனை குறிய குற்றம் அல்லது திட்டமிட்ட குற்றங்கள் செய்தீர் அல்லது செய்ய முயற்சி செய்தீர் என்றுசந்தேகத்திற்குரிய ஒன்று அல்லது பல காரணங்கள் இருக்கின்றன.

நீங்கள் சம்மந்தப்பட்ட இந்த குற்றத்தின் சட்ட குறிப்பு, நடைபெற்ற திகதி மற்றும் இடத்தை தெரிந்துகொள்ளும் உரிமை உங்களுக்கு இருக்கின்றது. அத்துடன் காவலில் வைக்க படுவதற்கு உள்ள காரணங்களையும் நீங்கள் தெரிந்துகொள்ளலாம்.

நடந்த அந்த சம்பவங்களை பற்றி நீங்கள் சொல்வது இருபத்திநான்கு மணி நேரம் நீங்கள் காவலில் இருக்கும் போது கேட்கப்படும்.

அந்த தவணைக்கு பிறகு, அரசாங்க தரப்பு வழக்கறிஞர் (அல்லது நீதிபதி), மேலும் இருபத்திநான்கு மணி நேரம் உங்களை காவலில் வைத்திருக்க முடிவு கூறலாம். நீங்கள் தண்டனை அதிகாரிக்கு முன் காண்பிக்க படுவீர்கள், தேவைபட்டால் ஒளி ஒலி கலந்தாய்வு மூலமாக செயல்படலாம்.

விதிவிலக்காய், மற்றும் ஆய்வு அல்லது அறிவுறுத்தல்களுக்கு தேவை என்றால், இரண்டு முறை 24 மணி நேரம் மேலதிகமாக உங்கள் காவல் நேரத்தை, சுதந்திரம் மற்றும் காவல் நீதிபதி, அரசாங்க தரப்பு வழக்கறிஞர் கோரிக்கையால், அல்லது நீதிபதி மூலம், கூட்டலாம்.

காவலில் இருக்கும் நேரத்தின் முடிவில், நீங்கள், அரசாங்க தரப்பு வழக்கறிஞர் (அல்லது நீதிபதி) முடிவில், ஒன்று நீங்கள் தண்டனை அதிகாரிக்கு முன் காண்பிக்க படலாம் அல்லது விடுவிக்க படலாம். முதலாம் சூழ்நிலை என்றால், உங்கள் காவல் நேரம் 72 மணி நேரம் தாண்டவில்லை என்றால், உங்கள் காவல் நேரம் முடிந்து

அதிகபச்சம் 20 மணி நேரத்திற்க்குள், உங்களை ஒரு நீதிபதி முன் நிறுத்துவார்கள்.

**மேலும் உங்களுக்கு இருக்கின்ற உரிமைகள் என்னவென்று தெரிவிக்கபடுகிறது:**

## சில நபருக்கு தெரிவித்தல்

அதிகாரி அல்லது போலீஸ்காரர் உங்கள் பெற்றோருக்கு அல்லது உங்கள் பாதுகாப்பாளர், அல்லது உங்களை பொறுப்பாக பார்த்துகொள்கிற நபர் அல்லது உங்கள் பொறுப்பை ஏற்ற பொது பணிக்கு நீங்கள் காவலில் இருப்பதை தெரிவிப்பார்.

நீங்கள் உங்கள் முதலாளி இடமும் சொல்லலாம்.

நீங்கள் வெளிநாட்டை சேர்ந்தவராக இருந்தால், உங்கள் நாட்டின் தூதரக அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளலாம்.
எனினும் விசாரணை தேவைகளுக்கு அரசாங்க தரப்பு வழக்கறிஞர் (அல்லது நீதிபதி) உங்கள் விண்ணப்பங்களை எதிர்க்க வாய்புக்கள் உள்ளன. தவிர்க்கமுடியாத காரணங்கள் இருந்தால் தவிர, இந்த செய்முறைகள், உங்கள் கோரிக்கை நேரத்தில் இருந்து அதிகபட்சம் 3 மணி நேரத்திற்கு ஏற்படும்.

## ஒரு மருத்துவரால் பரிசோதிக்கபடலாம்

நீங்கள் ஒரு மருத்துவ பரிசோதனை கேட்கலாம். உங்கள் காவல் நேரம் அதிகரிக்க பட்டால், மறுமுறை மருத்துவ பரிசோதனை கேட்கலாம். இரண்டு நாள் காவலில் இருந்த பிறகும், காவல் நேரத்தை மேலும் அதிகரிக்க உத்தரவு வந்தால், நீங்கள் ஒவ்வொரு நேர கூடுதலுக்கும், கண்டிப்பாக ஒரு மருத்துவ பரிசோதனை செய்வீர். அந்த கோரிக்கையை, உங்கள் பெற்றோர், உங்கள் பாதுகாப்பாளர் அல்லது உங்களை பொறுபெடுத்த பொது பணியில் இருக்கும் நபரும் செய்யலாம்.

## அறிக்கைகளை செய்ய, கேள்விகளுக்கு பதிலளிக்க அல்லது மௌனமாக இருக்க

உங்கள் பெயர் விவரங்களை தெரிவித்த பிறகு, விசாரணை தோறும், உங்களுக்கு இருக்கும் உரிமைகள்:
- அறிக்கைகளை செய்ய
- உங்களிடம் கேட்கப்படும் கேள்விகளுக்கு பதிலளிக்க
- அல்லது மௌனமாக இருக்க

## ஒரு வழக்கறிஞரின் உதவி பெறலாம்

- **வழக்கறிஞரை தேர்ந்து எடுப்பது**

காவல் நேரம் தொடக்கத்திலேயே, அல்லது காவல் நேரம் அதிகரிக்க பட்டால், அந்த அதிக நேர தொடக்கத்திலேயே, நீங்கள் விரும்பிய ஒரு வழக்கறிஞரின் உதவியை நாடலாம். நீங்கள் உங்களுக்கு விருப்பமான வழக்கறிஞரை தேர்ந்தெடுக்க முடியாத சூழ்நிலையிலோ அல்லது நீங்கள் தேர்ந்தெடுத்த வழக்கறிஞரை தொடர்ப்பு கொள்ள முடியாது என்றால், நீங்கள் ஒரு அரசாங்க இலவச வழக்கறிஞரை கேட்கலாம்.

உங்கள் வழக்கறிஞரை தேர்ந்தெடுப்பவர் உங்கள் பெற்றோராக இருக்கலாம், அல்லது உங்கள் காப்பாளர், அல்லது நீங்கள். ஒப்படைக்கப்பட்ட பொதுப்பணி துறை அல்லது

அந்த பணியை சேர்ந்த ஒரு நபராக இருக்கலாம்.

- **வழக்கறிஞரின் உதவி மற்றும் தலையீட்டிற்கு உள்ள நேரம்**

வழக்கறிஞர் செய்ய கூடியது:
-நம்பகத்தன்மையை உறுதிசெய்கின்ற நிலையில் ; உங்கள் இடம் 30 நிமிடங்கள் பேட்டி காணலாம் ;
-நீங்கள் கோரிக்கையிட்டால், உங்கள் வழக்கறிஞர் விசாரணைகளுக்கும், நேருக்கு நேர் நடைபெறும் நேரத்திலும் துணையாக இருக்கலாம்.

அப்படியானால் உங்கள் முதல் விசாரணை, உங்கள் பெயர் விபரங்களை கேட்க இருந்தால் தவிர, உங்கள் வழக்கறிஞர் இல்லாமல், அவரை கூப்பிட்ட இரண்டு மணிநேரத்திற்கு முன் நடைபெறாது. ஆனால், உங்கள் முதல் விசாரணை, அரசாங்க தரப்பு வழக்கறிஞர் (அல்லது நீதிபதி) முடிவில், உங்கள் வழக்கறிஞர் இல்லாமலே உடனடியாக நடைபெறலாம், அது ஆய்வு தேவைகளுக்காக.

உங்கள் வழக்கறிஞர், விசாரணை நடைபெறும் நேரத்தில் வந்தால், உங்கள் கோரிக்கையால் அதை நிறுத்தி, உங்கள் வழக்கறிஞர் உடன் நீங்கள் கலந்து உறையாடலாம்.

அரசாங்க தரப்பு வழக்கறிஞர் (அல்லது நீதிபதி) மற்றும் காவல்நிலை மற்றும் சுதந்திர நீதிபதி, எனினும் கட்டாயமான மற்றும் விதிவிலக்கான காரணங்களால் விசாரணை தோறும் இருக்ககூடிய உங்கள் வழக்கறிஞர் சந்திப்பை 12 மணிநேரங்களுக்கு தள்ளி வைக்கலாம்.

**ஒரு மொழிபெயர்ப்பாளரின் உதவி**

நீங்கள் பிரெஞ்சு மொழியை பேசுபவர் அல்லது புரிந்து கொள்பவராக இல்லை என்றால், உங்கள் விசாரணைக்கும், உங்கள் வழக்கறிஞர் உடன் முறையிடவும் உங்களுக்கு இலவசமாக ஒரு மொழிபெயர்ப்பாளர் உதவி கேட்க உரிமை இருக்கிறது.

**காவலில் இருக்கும் நேரத்தை நிறுத்துவதற்கான உரிமை**

அரசாங்க தரப்பு வழக்கறிஞர் அல்லது நீதிபதி இடம், தண்டனை அதிகாரி, மேல் அதிகமாய் உங்களை காவலில் வைக்க வேண்டும் என்று முடிவெடுக்கும் போது அதை மேலதிகமாய் கூட்ட வேண்டாம் என்று நீங்கள் மறுப்பு தெரிவிக்கலாம்.

**உங்கள் கோப்பில் இருக்கும் சில பாகங்களை நீங்கள் பார்க்கலாம்**

உங்கள் கோரிக்கையால் அல்லது உங்கள் வழக்கறிஞரின் கோரிக்கையால் பார்க்க, கேட்க கூடியது, அதிகபச்சம் உங்கள் காவல் நேரத்தை அதிகரிப்பதற்கு முன்:
- உங்களுடைய தடுப்பு காவலில் வைத்திருத்தல் அறிவிப்பு நிமிடங்கள் ஆவணம் ;
- உங்களை பரிசோதிக்க மருத்துவரின் சான்றிதழ் அல்லது சான்றிதழ்கள்.
- உங்கள் விசாரணைகளுக்குரிய ஆவணம் அல்லது ஆவணங்கள்.